**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 12/2023**
திரு. சரஸ்வதி (P.W. –1) **06.08.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. நான் படித்துள்ளேன் என்றால் இல்லை. என்னுடைய தகப்பனார் பெயர் ரெங்கசாமி என்றால் ஆமாம். என்னுடைய தகப்பனாருடன் பிறந்தவர்கள் பழனிச்சாமி கவுண்டர், கருப்ப கவுண்டர் என்றால் சரி. என்னுடைய தகப்பனாரும் அவருடைய சகோதரர்களும் குடும்ப சொத்துக்களை 18.03.2002 ம் தேதி பாகம் பிடித்துக் கொண்டார்கள் என்றால் சரி. என்னுடைய தகப்பனாருக்கு இரண்டு பெண் வாரிசுகள் என்றால் ஆமாம். நான்கு ஆண் வாரிசுகளும் உள்ளார்கள். பாகப்பிரிவினை ஏற்பட்ட போது வாதிக்கும் பிரதிவாதிக்கும் ஐ செடியூல் சொத்தாக 20 சென்ட் ஒதுக்கி கொடுக்கப்பட்டது என்றால் சரி. 4.12.2008 ம் தேதி நானும் பிரதிவாதியும் சேர்த்து எங்களுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்ட சொத்தில் 4,390.375 சதுரஅடிகள் கொண்ட சொத்தை விற்பனை செய்து விட்டோம் என்றால் ஆமாம்.

2. 08.03.2012 ம் தேதி அவ்வாறு விற்றது போக மீதம் உள்ள சொத்துக்களை நான் பிரதிவாரியான என்னுடைய சகோதரிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தினேன் என்றால் சரி. அவ்வாறு செட்டில்மெண்ட் மூலம் வந்த சொத்துக்களுக்கு உரிய வருவாய் ஆவணங்களை தெளிவாக அவர் பெயரில் மாற்றிக் கொண்டார் என்றால் எனக்குத் தெரியாது. விற்பனை செய்து கொடுப்பதாக சொல்லி வாங்கினார். செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்ட போது பிரதிவாதி சொத்துக்களை

விற்பனை செய்து கொடுப்பதாக சொல்லித்தான் ஆவணத்தை ஏற்படுத்தினார் என்றால் சரி. அந்த விவரங்கள் அப்போதே எனக்கு தெரியும் என்றால் ஆமாம். செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்ட பிறகு தாவா தாக்கல் செய்யும் வரை எழுத்து பூர்வமாக சொத்துக்களை விற்பனை செய்து கொடுப்பதாக சொன்னதை பொறுத்து பிரதிவாதியிடம் கேட்டீர்களா என்றால் எழுதி கேட்கவில்லை. அதிகாரியிடம் சென்று இரண்டு முறை மனு கொடுத்தேன். இரண்டு அதிகாரிகளிடம் கொடுத்தேன். பலமுறை நேரில் சென்று கேட்டேன் அதிகாரிகள் பிரதிவாதியிடமே பேசி வந்தார்கள்.

3. தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்து கொடுக்குமாறு ஆர் டி ஓ மற்றும் டிஆர்ஓ விடும் மனு கொடுத்து தள்ளுபடி செய்யப்பட்டதா என்றால் மனு கொடுத்தேன் என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. அந்த இரண்டு மனுக்களும் உண்மை தன்மை இல்லை என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் தவறு. செட்டில்மெண்ட் ஆவணம் என்று தெரிந்து தான் ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரி. ஆனால் என்னுடைய மக்கள் அதில் கையொப்பம் செய்யவில்லை. செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்டு 13 ஆண்டுகள் கழித்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரி. சொத்தை விற்பனை செய்து கொடுப்பதாக பிரிதிவாதி தொடர்ந்து சொல்லி வந்தார். ஆனால் அவ்வாறு செய்யவில்லை.

4. ஜெயசக்திவேலுக்கு சொத்துக்களை நானும் பிரதிவாதியும் சேர்ந்து விற்பனை செய்த போது அந்த கிரைய தொகை முழுவதையும் நான் பெற்றுக் கொண்டேன் என்றால் தவறு. அதனால் தான் மீதம் உள்ள சொத்துக்களை பிரதிவாதி பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்தேன் என்றால் தவறு. முதல்விசாரணையில் வாதி, பிரதிவாதி, வாதியின் கணவர், பிரதிவாதியின் கணவர் சந்திரசேகர் ஆகியோர் முன்னிலையில்

சொத்துக்களை விற்பனை செய்து கொடுப்பதாக பேசப்பட்டது என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் அப்படி சொல்லவில்லை. தாவா சொத்துக்களை சேர்ந்து விற்பனை செய்தால் நல்ல லாபம் வரும் என்று முதல் விசாரணையில் சொல்லி இருப்பது பொய் என்றால் தவறு. உண்மையிலேயே அவ்வாறு லாபம் இருந்திருந்தால் இரண்டு பேரும் சேர்ந்து விற்பனை செய்து இருப்போம் எழுத வேண்டிய அவசியம் இல்லை என்றால் தவறு.

5. 2012 ஆம் வருடம் ஜெய சக்திவேலுக்கு விற்பனை செய்த போது எனக்கு உரிய தொகை முழுவதையும் பெற்றுக் கொண்டேன் தற்போது சொத்து விலை அதிகமாக ஏற்பட்டு விட்டது என்பதால் அதில் ஆதாயம் அடைய வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தாவா சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரி கொடுக்க மறுக்கிறார். தாவா சொத்தை பொறுத்து ஏற்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய முடியாது காலம் தாமதம் ஏற்பட்டு விட்டது என்றால் தவறு தாவாவே பொய் என்றால் தவறு. தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN
Digitally signed by K R KANNAN
Date: 2025.08.06 18:52:19 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.